கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

ஆவணிமாத இதழ்
NEWS BULLETIN
AUGUST 2020
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
12/09/2020 முதல்	அன்புள்ள பெற்றோர், மாணவர்கள் கவனத்துக்கு, வணக்கம். சென்ற தவணை Whatsup /Skype இணையத்தளத் தமிழ் வகுப்பில் கலந்துகொண்ட மாணவர்கள், மற்றும் தவிர்க்கமுடியாத காரணங்களால் கலந்து கொள்ளமுடியாதவர்களது வேண்டுகோளுக்கு அமைய, புதிய தவணைக்கான தமிழ் வகுப்புகள் Zoom இணைய வழியாக ஆரம்பமாகிறது. President Kennedy பாடசாலை வாடகைக்குக் கிடைத்ததும், அங்கு கலைப்பாடங்களுடன் வகுப்புகள் தொடரும். கடந்தகால பெறுபேறுகளை மதிப்பீடு செய்து பல மாணவர்கள் வகுப்பேற்றப்பட்டுள்ளனர். புதிய வகுப்புக்கான தமிழ்ப் புத்தகங்கள் உண்டு. தேவையானோர் தலைமை ஆசிரியையுடன், இல்லாவிட்டால் பொன்மணியுடன் தொடர்பு கொள்ளலாம். உங்கள் ஒவ்வொருவருக்கும், Zoom இணையத்தள அடையாள தொடர்பு விபரம் தனிதனியாக அனுப்பிவைக்கப்படும். சென்ற தவணை தமிழ் வகுப்புகள் இலவசமாக இடம்பெற்றன. ஆசிரிய வேதனத்துக்காக சிறிய தொகை இம்முறை அறவிடுவது தொடர்பாக உங்களுடன் இணைந்து முடிவு செய்வோம். நன்றி. கொவன்றி தமிழ் மொழிக் கலைக் கழகம், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்.

ஆவணி மாதத்தின் சில சிறப்புகள்


ஆடி போய் ஆவணி வந்தால் நன்மை கூடி வரும் என்பதைப் போல் ஆவணி மாதம் மிகச் சிறந்த மாதமாகக் கருதப்படுகிறது. தமிழ் மாதங்களில் ஒவ்வொன்றுக்கும் தனி முக்கியத்துவம் உண்டு. சித்திரை தொடங்கி பங்குனி வரை பல்வேறு விசேஷங்கள் வருவதுண்டு. அதில், ஒரு சில மாதங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

ஆவணி மாதத்தில் சூரியன் சொந்த வீட்டில் ஆட்சி பெற்று வலுவாக அமர்கிறார். சூரியனே ஆத்மகாரகன் என்றும், பிதுர்காரகன் என்றும் அழைக்கப்படுகிறார். இதன் காரணமாக சூரியன் வலுப்பெறும்போது எந்த காரியத்தைச் செய்தாலும் சிறப்பான பலனைத் தரும்.

ஆவணி மாதம் வரும் ஞாயிற்றுக்கிழமை விரதம் இருப்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஏனெனில் ஞாயிறு என்றாலே சூரியன். அது மட்டுமின்றி, ஆவணி மாதத்தில் ஒவ்வொரு ஞாயிறு காலை 6.00 - 7.00 மணி வரை சூரிய ஹோரையே இருக்கும். ஆவணியில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஆன்மிக அறிவைப் புகட்டினால், அவர்கள் அதில் சிறந்து விளங்குவர். தேகநலனுக்காகச் சூரிய நமஸ்காரப் பயிற்சி எடுப்பவர்கள் ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் தொடங்குவது மிகவும் நல்லது.

ஆவணி மாதத்தில் விநாயகர் அவதாரம் கிருஷ்ணாவதாரம் நிகழ்ந்ததாகச் சொல்வார்கள். ஆவணி மாதத்தில் கிரகப்பிரவேசம் செய்தால் அந்த வீட்டில் நீண்ட நாட்கள் தங்கலாம். திருமணம் செய்தால் வாழ்க்கைத் துணை சிறப்பாக அமையும். இவ்வாறாகத் தமிழ் மாதங்கனில் ஆவணி மாதம் மிகவும் சிறந்த முறையில் விளங்குகின்றது.


நன்றி
தமிழ் ஆசிரியை
திருமதி முகுந்தன்.



மூலமொழி

உலகில் பல மொழிகள் பேசப்படுகின்றன.
ஒவ்வொரு மொழியும் மூலமொழி அல்ல.
மூலமொழிகளில் இருந்தே ஏனைய பல
மொழிகள் உருவாகியுள்ளன. சமுத்துக்காட்டாக
இலத்தீன் மொழியில இருந்து பிரத்து, இத்தாலி
போன்ற பல மொழிகள் உருவாகின. தமிழ்
ஒரு மூலமொழியாகும். இம் மொழியில்
இருந்தே பல திராவிட மொழிகள் உருவாகின
கன்னடம், உருது, மலையாளம், தெலுங்கு
போன்ற பல திராவிட மொழிகள் தமிழையே
மூலமொழியாகக் கொண்டனை. இத்தகைய
பழமையும் சிறப்பும் வாய்ந்த தமிழ்மொழி
எங்கள் தாய்மொழி என்பதில் பெருமை
கொள்வோம். இன்று எங்கள் தமிழ் மொழி
செம்மொழி என்ற உயர் தகுதியையும்
பெறுகின்றது. இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய
தொன்றாகும். இத்தகைய சிறப்புவாய்ந்த எம்
மொழியில் பல சிறந்த இலக்கியங்கள்
காணப்படுகின்றன. ஐம்பெருங்காப்பியங்கள்
மிகவும் போற்றத்தக்கவையாக இருக்கின்றன.
இதில் மிகவும் காலத்தால் முற்பட்ட
சிலப்பதிகாரம். இது இளங்கோவடிகளால்
எழுதப்பட்டது. இந்நூல் தமிழரது பண்பாட்டு
வாழ்வியலைக் கூறுகின்றது.

பெயர் செல்வி: ஷஷ்விகா
ஜெகதீசன்
வகுப்பு : 5



பெண்மை

வாழ்க பெண்ணே வாழ்கபெண்ணே,
வளமுடன் வாழ்க பெண்ணே!

இறைவன் படைத்த இரண்டாம் படைப்பில்,
இனிய படைப்பு நீ ஒன்றுதான்!

இவ்வுலகத்து அரசியாக சிறந்து விளங்கி,
இனிதாய் வழிகாட்டியவரும் நீதான்!

தாய்மைச் சிறப்பையும் தன்னடக்கத்தையும்,
கொண்டவரும் நீதான்!

தரணியை ஆளும் தனி திறமை,
கொண்டவரும் நீதான்!

வீரங்கொண்டு வீரத்தை அடைந்தவரும்,
நீ தான் பெண்ணே!

உண்மை அன்பை இவ் தரணியில்,
உணர்த்திய வரும் நீ தான்!

உறங்காக் கண் கொண்டு பாரிபவரும்,
நீ தான் பெண்ணே!

பெண்மை எனும் சக்தியே
இந்தக் கவிதை சமர்பணம்.

தரணி,
ஆக்கம்: அக்சயா யதிமன்னராஜா, ஆண்டு-07.

நினைத்துப் பார்க்கிறேன்.....



இயற்கை எழில் நிறைந்த சோலையிலே
ஆற்றங்கரை அருகமைந்த ஆலயத்திலே
அமர்ந்திருந்த இறைவனை வணங்கி,
அமைதி பெற்று மனம் மகிழ்ந்தோம்!

தமிழ் வளர்த்த அப்புண்ணிய பூமியை
இன்றும் நினைத்து நன்றி நவில்கின்றோம்!
தமிழர்கள் ஒன்றாய்க்கூடிய அக்காட்சிதனை
எப்படி மறப்பது! கிடைக்குமா அத்தருணம்?

பெற்றோர்கள் உதவும் கரங்களாய்த் திகழ,
ஆசிரியர்கள் கற்பித்தோம் முத்தமிழ் வளர்க்க
மாணவர்கள் விருப்புடன் இனியதமிழ் பயின்று
கலைப்பாடங்களுமினிதே கற்று மகிழ்ந்தனர்!


அந்தநாள் நினைவுகள் நெஞ்சில்
பசுமையானவை!
இக்கால நிகழ்வுகள் வாழ்வில் துயரமானவை!
பொறுத்தது போதும் தாமதம் வேண்டாம்!
இனியொரு விதி செய்வோம் எம்தமிழுக்காய்!

இணையவழி கற்றல், கற்பித்தல் முடியுமென,
இனிதே உறுதிகொண்டு விழித்தெழுவோம்!
தாய்மொழி கற்றிடத் துடிக்கும் மாணவர்களை
இன்முகம் காட்டி அன்புடன் வரவேற்போம்!


எதையும் தாங்கும் இதயத்துடன் இணைந்து
இன்னல்களைச் சகித்தே வென்றிடுவோம்!
இருகரங்கூப்பி இறையருள் வேண்டிடுவோம்!
படைத்த இறைவன் என்றுமே காத்திடுவார்!

நன்றி!
திருமதி கி. அனற்செபமலர்,
தமிழ் ஆசிரியை.

விதிகளைப் பின்பற்றிக் கொரோனாவை விரட்டுவோம்







கல்வியின் சிறப்பு

செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்வியே செல்வமாகும். நாம் வாழ்வில் எவ்வளவு உயர்ந்தோமோ அந்த அளவுக்கு நான் அறிவு வளரும். மனிதனின் அறிவுக் கண்ணை திறந்து வைக்கும் சக்தி கல்வி ஒன்றுக்கு தான் உண்டு.

கல்வி நிலையானது, காலத்தை கடந்து வாழ்வது, அறிவை தருவது, ஆற்றலை பெருக்குவது, மனிதனை மனிதனாக்குவது. கல்வித் செல்வம் மற்றவர்களுக்கு கொடுக்க, கொடுக்க கூடுமே தவிர குறையாது. கள்வர்களால் களவாட முடியாத செல்வம்.

நற்குலத்துக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. நாம் தினமையிலே கல்வியை தொடர்ந்து வேண்டும். அந்த கல்வி தான் நிலைத்து நிற்க கூடிய கல்வி. அதனால் தான்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பர்"
மானுடர்களாகிய நாம் நீங்களாக முறையில் கல்வி கற்று, எமது பெற்றோர்களுக்கு பெருமை தேடிக் கொடுப்பது மட்டுமல்லாமல், இவ்வளவு காலமும் அவர்கள் செய்த உதவிகளுக்கு கைமாறாக செய்யும் நன்றி.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்"

கல்விதான் பிறவினை அறிவாளி ஆக்குகிறது. அறியாமை எனும் இருட்டைக் கல்வி எனும் ஒளிதான் போக்குகிறது. நல்ல புத்தகங்கள் அறிவு கண்ணைத் திறக்கும் ஒரு திறவுகோல். கல்வி பிறவினை மட்டும் மேம்படுத்தாது. அவனைச் சார்ந்தவர்களையும், சமுதாயத்தையும், ஏன் நாட்டையுமே அது உயர்த்த உதவும்.

நன்றி

தினேசன் சிவபாலன்
வகுப்பு - 6

சிறுதுளி பெருவெள்ளம்

"நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்" என்பதுபோல் ஒவ்வொரு முறையும், நீங்கள் அமேசன் வலைத்தளத்தினூடாகப் பொருட்களை வாங்கும்போது கீழ்வரும் இணைப்பினூடாகச் சென்றால், அமேசன் நிறுவனம் குறிப்பிட்டதொரு தொகையைக் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கும் என்பதை அன்போடு அறியத்தருகின்றோம்.

நன்றியுடன்
கொவன்றி தமிழர் நலன்புரிச்சங்கம்.





பேச்சுப்போட்டி

தமிழ் ஆர்வலர் குழு வழங்கும் தேசிய அளவிலான தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையிலான பேச்சு போட்டி. பங்குபற்ற விரும்பிய மாணவர்கள் தயவு செய்து உங்கள் பெயர் விபரங்களை திருமதி பெண்மணியிடம் கொடுக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.



